


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.6.2023) முகாம் அலுவலகத்தில், புதுடெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் சந்தித்த போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி வரவேற்றார். உடன் பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள் உள்ளார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.6.2023) முகாம் அலுவலகத்தில், பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள் சந்தித்த போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி வரவேற்றார். உடன் புதுடெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் உள்ளார்.

## டெல்லியில் ‘ஆம் ஆத்மி’ அரசுக்கு எதிராக பா.ஜ.க. அரசு திட்டமிட்டு செயல்படுகிறது!

# ஒன்றிய அரசின் அவசரச் சட்டத்தை தி.மு.க. கடுமையாக எதிர்க்கும்!

## சென்னையில் டெல்லி – பஞ்சாப் முதலமைச்சர்களுடன் பேசிய பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, ஜூன் 3-**

**டெல்லியில் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி அரசுக்கு எதிராக பா.ஜ.க. அரசு திட்டமிட்டு செயல்பட்டு, உச்சநீதிமன்றத் தீர்ப்பையும் மீறி அவசரச் சட்டம் பிறப்பித்துள்ளது. ஒன்றிய அரசின் அந்த அவசரச் சட்டத்தை தி.மு.கழகம் கடுமையாக எதிர்க்கும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்துள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (01.06.2023) முகாம் அலுவலகத்தில் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் ஆகியோரைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:–

தில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களும், பஞ்சாப் மாநிலத்தினுடைய முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களும் இன்று என்னை சந்தித்திருக்கிறார்கள்.

கெஜ்ரிவால் அவர்களைப் பொறுத்தவரையில், நான் டெல்லிக்கு செல்லுகிறபோதெல்லாம் அடிக்கடி அவரை சந்திக்கிற வாய்ப்பைப் பெறுவது உண்டு. டெல்லியில், மாடல் ஸ்கூல், மாடல் கிளாஸ் ரூம்ஸ் என்ற ஒரு அற்புதமான திட்டத்தை நடத்திக் கொண்டிருப்பதை அறிந்து, அதுபோல் தமிழ்நாட்டிலும் ஏற்படுத்த வேண்டும் என்று கருதி அந்த மாடல் பள்ளிகளை, மாடல் கிளாஸ் ரூம்களையெல்லாம் நானும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களும் நேரடியாகச் சென்று ஆய்வு நடத்தினோம். அதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறது, அதுவும் பெண்களுக்காக பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறது என்று உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

### புதுமைப் பெண் திட்டம்!

அந்தத் திட்டத்தில் ஒன்றாக மாணவியர்கள், பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு கல்லூரிக்குள் நுழைகிறபோது, அவர்களது கல்விக்கு உதவி செய்ய வேண்டும், நிதி உதவி வழங்கிட வேண்டும் என்று முடிவெடுத்து, ‘புதுமைப்பெண்’என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி அதன் மூலமாக மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு வழங்கக்கூடிய ஒரு திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அந்தத் திட்டத்தை டெல்லி முதலமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து சிறப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரும் ஒப்புதல் தந்து, வருகைதந்து அதை சிறப்பித்தார்கள்.

அப்படி வந்த நேரத்தில், கோட்டூர்புரத்தில் அமைந்திருக்கக்கூடிய அண்ணா நூற்றாண்டு நூலகத்தையும் பார்வையிட்டு பாராட்டி மகிழ்ந்தார்கள்.

டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் அவர்களைப் பொறுத்தவரை ஒரு நல்ல நண்பராக என்னோடு பழகிக் கொண்டிருக்கக்கூடியவர். நானும் அவரிடத்திலே நல்ல நண்பராக பழகிக் கொண்டிருக்கிறேன்.

டெல்லி முதலமைச்சருக்கு அதேபோல் அவர் சார்ந்திருக்கக்கூடிய அவர் தலைவராக இருக்கக்கூடிய ஆம் ஆத்மி கட்சிக்கு நெருக்கடி ஏற்படுத்த வேண்டும் என்று முடிவு செய்து, மோடி தலைமையில் இருக்கக்கூடிய பி.ஜே.பி. ஆட்சி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய ஆட்சியை சுதந்திரமாக செயல்படவிடாமல் பல்வேறு நெருக்கடிகளை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் தில்லி துணை நிலை ஆளுநர் மூலமாகத் பல்வேறு தொல்லைகளெல்லாம் தொடர்ந்து வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. “பணியாளர்கள்” தொடர்பாக 5 நீதிபதிகள் கொண்ட உச்சநீதிமன்ற பெஞ்ச் தில்லி அரசுக்கு சாதகமான ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

### ஆளுநர் மூலமாக பல்வேறு தொல்லைகள்

ஆனால் அது நிறைவேறக்கூடாது என்ற ஒரு எண்ணத்தோடு பி.ஜே.பி. ஆட்சி, அதை எதிர்த்து ஒன்றிய அரசு இன்றைக்கு ஒரு அவசரச் சட்டத்தை பிறப்பித்து இருக்கிறது. இந்த அவசரச் சட்டத்தை நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையாக எதிர்க்கும், அதில் எந்த மாற்றமும் கிடையாது.

எனவே, இது குறித்து இரு முதலமைச்சர்க ளும் இன்று எங்களோடு கலந்து பேசி, மற்ற மாநிலத்தில் இருக்கக்கூடிய முதலமைச்சர்க ளும் பல்வேறு கட்சியினுடைய தலைவர்களும் என்னென்ன நிலையில் இருக்கிறார்கள் என்ற அந்த சூழ்நிலையைப் குறித்து நாங்கள் கலந்து பேசினோம். ஆகவே, அந்த வகையில் இந்தக் கூட்டம் நடந்திருக்கிறது.

நிச்சயமாக, எல்லா மாநிலத்தினுடைய முதலமைச்சர்களும் அகில இந்திய அளவிலுள்ள கட்சியின் தலைவர்களும் இதற்கு ஆதரவு தரவேண்டும் என்று நான் இந்த நிகழ்ச்சியின் மூலமாக அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த சந்திப்பு என்பது கடந்த வாரமே நடந்திருக்க வேண்டும். சென்ற வாரம் தில்லியினுடைய முதலமைச்சர் கெஜ்ரிவால் அவர்கள் என்னோடு தொடர்பு கொண்டு நேரம் கேட்ட நேரத்தில் அப்போது நான் ஜப்பான், சிங்கப்பூர் நாடுகளுக்கு செல்லுகிறேன், வந்தவுடன் தேதி தருகிறேன் என்று சொன்னேன். நேற்று இரவு தான் நான் சென்னைக்கு வந்தேன் என்பது உங்களுக்குத் தெரியும். வந்தவுடனே அவரை சந்திக்க நேரம் கொடுத்து, அந்த வகையில்தான் இந்த சந்திப்பு நடந்திருக்கிறது.

மிக ஆரோக்கியமாக, நாட்டிலே ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும் என்ற அந்த உணர்வோடு இந்தக் கூட்டம் நடந்திருப்பது உள்ளபடியே மகிழ்ச்சியளிக்கிறது. ஆகவே இது தொடர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**செய்தியாளர்** :– *12-ஆம் தேதி நடைபெறவுள்ள கூட்டம் பற்றி பேசியிருக்கிறீர்களா?*

**முதலமைச்சர்**: அது பற்றியும் பேசியிருக்கிறோம். அது சூழ்நிலை வருகிறபோது சொல்கிறோம். 12–ஆம் தேதி நிதிஷ்குமார் அவர்கள் கூட்டத்தைக் கூட்டுவதாக முடிவு செய்திருக்கிறார். ஆனால் காங்கிரஸ் கட்சியும் அதில் கலந்துகொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது, காரணம், ராகுல் அவர்கள் வெளிநாட்டிற்கு சென்றிருக்கிற காரணத்தால். அதேபோல் 12–ஆம் தேதி என்னைப் பொறுத்தவரையில், நானும் கலந்துகொள்ள முடியாத நிலை. காரணம், ஒவ்வொரு வருடமும் மேட்டூர் அணையை திறந்துவைக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சி இருக்கிறது. ஆகவே, தேதியை மாற்றி வையுங்கள் என்று நானும் சொல்லியிருக்கிறேன். கார்கே அவர்களும் சொல்லியிருக்கிறார்.

இப்போது கெஜ்ரிவால் அவர்களிடத்தில் நாங்கள் சொல்லியிருக்கிறோம். அவரும் தேதி மாற்றுவதற்கான முயற்சியில் நான் ஈடுபடுகிறேன், கட்டாயமாக மாற்றி வைக்கப்படும் என்ற உறுதியை தந்திருக்கிறார்.

**செய்தியாளர்** : *ஒன்றிய அரசு, மாநில அரசினுடைய அதிகாரங்களை தொடர்ந்து பறித்து வருகிறது. இந்த சூழ்நிலையில் இப்படியான ஒரு ஒன்றிணைப்பு என்பதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?*

**முதலமைச்சர்**: ஜனநாயகத்தைக் காப்பதற்கு இப்படிப்பட்ட ஒருங்கிணைப்பு அவசியம் தேவை. இது தொடர வேண்டும். இது நாடாளுமன்றத் தேர்தலுக்காக மட்டுமல்ல, ஜனநாயகத்தை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இது தொடர வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம், அது தொடர வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

# நாடாளுமன்றத்தின் மாண்பைக் காப்போம்!

## – ‘ஆனந்த விகடன்’ தலையங்கம்!

*உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் நாடாளுமன்ற நடைமுறைகளை கவனிப்பதற்கு வெளி நாடுகளில் இருந்தெல்லாம் பிரதி நிதிகள் வருவதுண்டு. ஒவ்வொரு பிரதேசத்துக்கும் வெவ்வேறு எதிர்பார்ப்புகளும் தேவைகளும் உள்ள மிகப்பெரிய இந்த தேசத்தில் பல மொழிகள் பேசும் மக்களை நம் எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். முக்கியத்துவம் வாய்ந்த தேசப் பிரச்னைகளை விவாதித்து முடிவுகள் எடுப்பதும், மக்கள் நலனுக்காக சட்டங்களை இயற்றுவதும் நாடாளுமன்றத்தின் முக்கியப் பணிகள்.*



*ஆனால், ‘நாடாளுமன்றத்தில் அமளி’, ‘நாடாளுமன்றம் முடங்கியது’ என்றே சமீபகாலமாக செய்திகளில் இடம் பிடிக்கிறது அந்த அவை. எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்ட காலம் போய், ஆளுங்கட்சியே அமளியில் இறங்கி அவையை முடக்கிய காட்சியை சமீபத்தில் முடிந்த கூட்டத்தொடரில் பார்த்தோம். நான்காண்டுகள் ஆகியும் இன்னமும் மக்களவைக்குத் துணை சபாநாயகர் இல்லை. பிரதமரே அவைக்கு அதிக நாள்கள் வருவதில்லை. மிகக்குறுகிய காலமே நாடாளுமன்றம் செயல்பட்ட சாதனையை கடந்த நான்கு ஆண்டுகள் பிடித்துள்ளன. எட்டுக் கூட்டத்தொடர்கள் குறித்த தேதிக்கு முன்பாக முடித்து வைக்கப்பட்டுள்ளன.*

*பல முக்கியமான மசோதாக்கள் அவையில் விவாதமே இல்லாமல் நிறைவேற்றப்படுகின்றன. உச்ச நீதிமன்றமே இதுகுறித்துக் கவலை தெரிவித்தது. சர்ச்சைக்குரிய மசோதாக்களை நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பி விவாதிக்கும் மரபும் குறைந்திருக்கிறது. நாடாளுமன்றத்துக்கு வெளியே அவசரச் சட்டங்களை அரசு கொண்டு வருவது இரண்டு மடங்கு அதிகரித்திருக்கிறது. நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு மத்திய அரசு எந்த அளவுக்கு மதிப்பளிக்கிறது என்பதை உணர்த்தும் புள்ளி விவரங்கள் இவை.*

*இப்படிப்பட்ட சூழலில்தான் புதிய நாடாளுமன்றக் கட்டடம் பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் திறப்பு விழா கண்டிருக்கிறது. இரண்டரை ஆண்டுகளில், சுமார் 1,200 கோடி ரூபாய் செலவில் எழுப்பப்பட்டுள்ளது புதிய நாடாளுமன்றம், இதை பிரதமர் நரேந்திர மோடி தலைமையேற்றுத் திறந்து வைத்து, செங்கோலையும் அங்கு நிறுவியிருக்கிறார்.*

*அரசியல் சட்டப்படி, நாடாளுமன்ற அமைப்புக்குத் தலைமை தாங்கும் அதிகாரத்தைப் பெற்றிருப்பவர் குடியரசுத் தலைவர்தான். ‘இதை ஆளுங்கட்சியின் பிரதிநிதியான பிரதமர் திறப்பதைவிட, எல்லோருக்கும் பொதுவானவரான குடியரசுத் தலைவர் திறந்து வைப்பதுதான் ஏற்புடையதாக இருக்கும்’ என்று சொல்லி, 20 எதிர்க்கட்சிகள் இந்த விழாவைப் புறக்கணித்துவிட்டன. ஆனாலும் குடியரசுத் தலைவர் இல்லாமலேயே பிரதமரை முன்னிலைப்படுத்தித் திறப்பு விழாவை நடத்தி முடித்திருக்கிறது அரசு.*

*நாடாளுமன்றம் என்பது அனைத்துக் கட்சிகளுக்குமான அவை. அதன் விவாதங்களில் பங்கெடுக்கும் உரிமையுள்ள எல்லாக் கட்சிகளையும் அதன் உருவாக்கத்திலும், திறப்பு விழா விலும் பங்கெடுக்கச் செய்திருக்க வேண்டும். அது, புதிய கட்டடத்திலாவது ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சிகளும் இணைந்து ஆக்கபூர்வமான விவாதங்களை முன்னெடுக்க ஒரு தொடக்கமாக இருந்திருக்கும். நாடாளுமன்றத்தின் மாண்பைக் காப்பது என்பது வெறுமனே கட்டடங்களை உருவாக்குவதில் இல்லை, அதைப் பயன்படுத்தும் முறையில்தான் இருக்கிறது.*

**நன்றி : ஆனந்த விகடன் (7.6.2023)**

## தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பிதழ்!

## இன்று (ஜூன் 3) வெளிவருகிறது!



தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி 3.6.2023 அன்று, அவருடைய மூத்த பிள்ளையான “முரசொலி”, தனது மூல முழுமுதல் ஆசிரியரான கலைஞரைப் போற்றி, சிறப்பிதழ் வெளியிட்டுப் பெருமை கொள்கிறது!

**இந்த ஆண்டு (2023-2024) முழுவதும், ஒவ்வொரு திங்களும் மூன்றாவது நாளன்று, கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பிதழ் வெளிவரும்.**

ஒவ்வொரு சிறப்பிதழிலும், ஒவ்வொரு பிரிவின் சான்றோர்தம் எழுத்தோவியங்கள் இடம் பெறும். அந்த வகையில், திரை உலக ஆளுமைகள் - கவிஞர் பெருமக்கள் - மருத்துவ வல்லுநர்கள் - பத்திரிகை, ஊடகத் துறையினர் எனப் பலரும் பங்கேற்கும் “முரசொலி சிறப்பிதழ்கள்” தொடர்ந்து அணி சேர்க்கும்.

3.7.2023 முரசொலி இதழுடன், கலைஞர் குறித்து, கவிஞர்களின் கற்கண்டுக் கவிதைச் சிறப்பிதழ் வெளிவரும்.

காலமெல்லாம் அலைகடலென நீடிக்கும் கலைஞரின் புகழை, அனைவரும் நாளெல்லாம் போற்றிடுவோம்!

**- ஆசிரியர்.**